LIBRARY
03 JUN 2012
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2009/2010 (ஜனவரி-2012)

## CC 1203 – Management and Entrepreneurship

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக                    நேரம் - 2 மணித்தியாலங்கள்

---

01. a) முகாமைத்துவத்தில் நோக்கம் அல்லது இலக்கினை வரையறுப்பது ஏன் முக்கியம் பெறுகின்றது என்பதற்கான காரணங்களை சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

b) ஓர் முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை முகாமைத்துவத் திறன்களைக் (Managerial skills) குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

02. a) வணிகச் சூழல் என்றால் என்ன? அதன் வகைகளை இனங்கண்டு விளக்கமளிக்குக.

(15 புள்ளிகள்)

b) "நிறுவனமொன்று தந்திரோபாயத் திட்டத்தினை உருவாக்கும் போது சூழல் காரணிகள் பற்றிய மதிப்பீடு அவசியம். சூழல் ஆய்வு செய்கையில் நிறுவனம் ஒன்றின் தொழிற்பாட்டிற்குச் சில காரணிகள் அச்சுறுத்தலாகவும் வாய்ப்பாகவும், பலமாகவும் பலவீனமாகவும் அமையும்". இக் கூற்றினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

03. a) ஒழுங்கமைத்தல் தத்துவத்தினை விளக்குக.

(15 புள்ளிகள்)

b) உயர்ந்த மற்றும் தட்டையான ஒழுங்கமைப்புக்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(10 புள்ளிகள்)

04. a) சிறந்த தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய வலுக்களை (Power) அடையாளம் காண்க. அத்துடன் அமைப்பு ஒன்றிற்கு தலைமைத்துவம் அவசியம் என்பதற்கான காரணங்களை ஆராய்க.

(15 புள்ளிகள்)

b) கட்டுப்பாட்டுப் படிமுறைகளைக் குறிப்பிடுவதுடன், நிறுவனமொன்று கடைப்பிடிக்கும் வேறுபட்ட கட்டுப்பாட்டு முறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)